**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**நாள்: 03.07.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

இந்திய அரசியல் சாசனம், அரசுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

10 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுடன், **இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கம்** விரைவில் தொடக்கப்படும் என, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் நேற்று கூட்ட நெரிசல் சம்பவம் நடந்த பகுதிகளை முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று நேரில் பார்வையிட்டார்.

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியின், பிஎட் மாணவர் சேர்க்கைக்கான விவர கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

மோடி மாநிலங்களவை 1(16)

அரசியல் சாசனம் என்பது, வெறும் சரத்துகளின் தொகுப்பு அல்ல என்றும், அதன் உணர்வும் வார்த்தைகளும் மதிப்புமிக்கவை என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்பு கூட்டத்தில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஆற்றிய உரைக்கு தீர்மானம் மீதான நன்றி தெரிவிக்கும் விவாதங்களுக்கு இன்று மாநிலங்களவையில் பதில் அளித்த அவர், அரசுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமே, அரசியல் சாசனம் தான் என்றார். அரசியல் சாசனம் 75 ஆம் ஆண்டை எட்டி வரும் நிலையில், அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் அண்ணல் அம்பேத்கரின் பங்களிப்பை தான் போற்றுவதாக திரு நரேந்திர மோடி கூறினார். அரசியல் சாசன தினம் கொண்டாடப்படுவதை ஆட்சேபித்தவர்களை, அவர் சாடினார். அரசியல் சாசன தினம் தற்போது மக்கள் விழாவாகவே மாறி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3 ஆவது பதவிக் காலத்தில், வறுமைக்கு எதிராக போராடுவதே, அரசின் முக்கிய செயல் திட்டமாக இருக்கும் என்றும், வறுமைக்கு எதிரான போராட்டத்தில் நாடு வெற்றி பெறும் என்றும் பிரதமர் கூறினார். மக்கள் நலத் திட்டங்களின் வேகம்,

ஆழம் மற்றும் விரிவாக்கத்திற்கு, அரசு உயர் முன்னுரிமை அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றையும் மீறி, உலகின் 5 ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும், அரசின் 3 ஆவது பதவிக் காலத்தில், உலகின் 3 ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்த தாங்கள் உறுதி பூண்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார். நாடு 5 ஆண்டுகளில் பொது போக்குவரத்து வசதிகளில் மாபெரும் மாற்றங்களை சந்திக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பி.எம்-கிசான் திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் 10 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாக பிரதமர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட பணிகளுக்கு ஆதரவாகவே, மக்கள் 3 ஆவது முறையாகவும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசை தேர்ந்தெடுத்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் பிரதமரின் பதில் உரையின் போது, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள், அவையின் மையப் பகுதியில் கூடி அமளி ஏற்படுத்தினர். பின்னர் அவர்கள்

மோடி மாநிலங்களவை (17)

அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். கேள்விகளை எழுப்பிய எதிர்கட்சிகளுக்கு, அதற்கான பதிலை கேட்க துணிச்சல் இல்லை என்று பிரதமர் கூறினார். முன்னதாக, இன்று காலை அவை கூடியபோது, குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்கள் தொடர்ந்து இடம் பெற்றன. உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் பகுதியில் நேற்று நடந்த கூட்ட நெரிசல் சம்பவத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து அவையில் இரங்கல் தெரிவிக்கப் பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக, அவைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்தார். சம்பவம் குறித்து விசாரிக்க குழு ஒன்றையும் அதிகாரிகள் அமைத்திருப்பதாக அவர் கூறினார். ஹத்ராஸ் சம்பவம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அறிக்கை அளிக்க வேண்டும் என எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே கோரினார். இத்தகைய சம்பவங்களை தடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும் அவர் கூறினார். இது முக்கிய ஆலோசனை என்றும், ஆளும் கட்சியும், எதிர்கட்சிகளும் இணைந்து பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது, மிக ஆரோக்கியமான மரபாக அமையும் என்றும் மாநிலங்களவை தலைவர் கூறினார்.

ஒத்திவைப்பு (5)

மாநிலங்களவையில் இன்று பிரதமரின் பதில் உரையை தொடர்ந்து, குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதை தொடர்ந்து, அவை, மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுவதாக அவை தலைவர் திரு ஜக்திப் தன்கர் அறிவித்தார். நாடாளுமன்ற மக்களவை நேற்றே காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

மோடி சந்திப்பு (4)

இன்று மாநிலங்களவையின் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மாநிலங்களவையின் தலைவரும், குடியரசுத் துணைத் தலைவருமான திரு ஜக்திப் தன்கரை சந்தித்து பேசினார். அவை முன்னவர் திரு ஜே பி நட்டா, மத்திய அமைச்சர்கள் மற்றும் எம்.பி களும் உடன் இருந்தனர்.

ராகுல் எதிர்ப்பு (8)

மக்களவையில் எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி, குறிப்பிட்ட ஒரு சமுகத்தினர் குறித்து வெளியிட்ட கருத்துகளை கண்டித்து டெல்லி பிஜேபி தலைவர்கள் இன்று டெல்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பான்சுரி ஸ்வராஜ் செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு ராகுல்காந்தி பொறுப்பற்ற முறையில் பேசி இருப்பதாக குற்றம் சாட்டினார். ஆயினும் தமது கருத்துக்கள் பாரதிய ஜனதாவிற்கு எதிரானதே தவிர, குறிப்பிட்ட சமுகத்திற்கு எதிரானது அல்ல என்று திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு (17)

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில், 2 நாள் உலக-இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை தொடக்கி வைத்தார். 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன், இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கம் விரைவில் தொடக்கப்படும் என்றும், உயர் தரமான தரவுத் தொகுப்புகளை உருவாக்கும் வகையில், ஏஐ புதுமையாக்க மையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவின் உள்ளாற்றலை பயன்படுத்துவதில் இந்தியாவின் அணுகுமுறை தொழில்நுட்பத்தின் ஜனநாயக மயத்தை நோக்கமாக கொண்டது என்று அமைச்சர் கூறினார். செயற்கை நுண்ணறிவின் அபாயங்களை தடுக்கும் வகையில் ஒழுங்கு முறை சட்டம் ஒன்றை அரசு உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானிய அமைச்சர் திரு ஹிரோஷி யோஷிடா தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜித்தின் பிரசாதா, தகவல் தொழில்நுட்பத் துறை செயலர் திரு எஸ் கிருஷ்ணன், நாஸ்காம் அமைப்பின் தலைவர் திருமதி தேப்ஜானி கோஷ், ஓப்பன்-ஏஐ நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு ஸ்ரீனிவாஸ் நாராயணன் ஆகியோரும் மாநாட்டின் தொடக்க அமர்வில் கலந்து கொண்டனர்.

ஹத்ராஸ் (14)

உத்தரபிரதேசத்தில், ஹத்ராஸ் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இன்று 121 ஆக அதிகரித்துள்ளது. சம்பவத்தில் 31 பேர் காயமடைந்ததாகவும், இவர்கள் அனைவரும் அபாய கட்டத்தை தாண்டி விட்டதாகவும், உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார். அவர் இன்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று, நிலைமைகளை பார்வையிட்டார். ஹத்ராஸ் அரசு மருத்துவமனைக்கும் அவர் நேரில் சென்று சிகிச்சையில் உள்ளவர்களை, சந்தித்து ஆறுதல் கூறினார். சம்பவம் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப் பட்டுள்ளதாகவும், ஆழமான விசாரணைகளை மேற்கொள்ள இக்குழுவிற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். சம்பவத்தில் பல கோணங்களை

ஆராய வேண்டி இருப்பதாக அவர் கூறினார். இதற்கிடையே, கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்த 121 பேரில் பெரும்பாலானவர்களின் சடலங்கள், அடையாளம் காணப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

*கல்வியியல் கல்லூரி* (15)

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியில், 2 ஆண்டு பிஎட் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான விவர கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு கல்வியியல் கல்லூரியின் மேலாண் இயக்குநர் திரு மாறன், நிர்வாகி திரு சாரங்கபாணி, கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் தாமஸ் ஆகியோர் உடனிருந்தனர். புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியில், 2 ஆண்டு பிஎட் படிப்பில் சேர, புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு முடித்த மாணவ-மாணவியர், விண்ணப்பிக்கலாம் என்றும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை, கல்லூரியின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. உள்ளூர் மாணவர் சேர்க்கை முடிந்த பின்னர், காலியாக உள்ள இடங்களுக்கு, வெளி மாநில மாணவ-மாணவிகளின்

விண்ணப்பங்கள், நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ரங்கசாமி உதவி* (8)

காரைக்கால் திருப்பட்டினம் பகுதியில் 12 வயது சிறுவன் படுகொலையால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அமைச்சர் பி.ஆர்.என் திருமுருகன் பரிந்துரையின் பேரில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கி உள்ளார். சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் இன்று முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சரை சந்தித்து இந்த உதவியை பெற்றுக் கொண்டனர். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர் திரு திருமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

தேர்தல் செலவினம் (7)

புதுச்சேரியில் மக்களவை தேர்தலில் போட்டியிட்ட அனைத்து 26 வேட்பாளர்களின் செலவு கணக்குகளை, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு குலோத்துங்கன் இன்று, செலவின பார்வையாளர்கள் முன்னிலையில்

சீராய்வு செய்து, ஏற்பளித்தார். தேர்தல் செலவு கணக்குகளை, தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*சந்திப்பு* (10)

ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி ஆகியோருக்கு இடையே ஐதராபாத்தில் வரும் 6 ஆம் தேதி நடைபெற உள்ள சந்திப்பிற்கான ஏற்பாடுகளை தெலங்கானா துணை முதலமைச்சர் திரு பட்டி விக்ரமார்க்கா இன்று நேரடியாக ஆய்வு செய்தார். ஆந்திர மாநிலம் இரண்டாக பிரிக்கப் பட்டது முதல், ஆந்திா-தெலங்கானா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையே நிலுவையில் உள்ள பிரச்சனைகள் குறித்து, முதலமைச்சர்கள் நிலையில் கூட்டம் நடத்தலாம் என ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு எழுதிய கடிதத்திற்கு, தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டியும் சம்மதம் தெரிவித்ததை தொடர்ந்து, இக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வானிலை (8)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 9 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரம், தெற்கு-வடக்கு மற்றும் மத்திய வங்கக் கடல் பகுதிகளிலும், மத்திய அரபிக் கடல் பகுதிகளிலும் பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள், அடுத்த 4 நாட்களுக்கு இப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்

ஜெய்சங்கர் (9)

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டு நிகழ்வுகளுக்கு இடையே, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு செர்கி லாவ்ரோவை சந்தித்து, தற்போது போர் பகுதியில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த, இந்தியாவின் கவலைகளை எடுத்துக் கூறினார். இவர்கள் பாதுகாப்பாக மீண்டும் தாயகம் திரும்ப வேண்டியதன்

அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கடந்த டிசம்பர் மாதம் கடைசியாக தாங்கள் சந்தித்த பின்னர் பல துறைகள் தொடர்பான ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்திய அரசியல் சாசனம் அரசுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

10 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுடன், இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கம் விரைவில் தொடக்கப்படும் என, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் நேற்று கூட்ட நெரிசல் சம்பவம் நடந்த பகுதிகளை முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று நேரில் பார்வையிட்டார்.

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியின், பிஎட் மாணவர் சேர்க்கைக்கான விவர கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார்.